அதிகாரிகளை அந்தப் பகுதிக்கு வரவழைத்தால், நான் அவர்களைக் கூட்டிச்சென்று காண்பித்து, அங்கே இருக்கும் முக்கிய மான சாலைகளைச் சரி செய்வதற்கு எடுத்துரைக்க எனக்கு வாய்ப்பு இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்து, உடனடியாக அந்தப் பகுதி மக்களின் குறைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் கோட்டப் பொறியாளர் அவர்கள் நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களைச் சந்திக்க ஏற்பாடு செய்து, அவரும் அந்த அதிகாரியும் சென்று அந்தப் பகுதியைச் சுற்றிப் பார்க்க, சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடன் ஏற்பாடு செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற அந்தப் பகுதிகளை உடனடியாகச் சீரமைக்க வேண்டுமென்று அரசின் சார்பிலே அவர்களுக்கு ஆணையிடப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கான நடவடிக்கை இந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடன் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசை யைத் தட்டும் ஒலி).

3. அறிக்கைகள் அளித்தல்

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன் வைக்கப் பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் வைத்தல். திரு. என். ஆர். சிவபதி, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் சார்பில்.

முற்பகல் 10.15

திரு. என். ஆர் சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ் நாடு சட்டப் பேரவையின் 1992—93 ஆம் ஆண்டுக் கான, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பதினாறாவது, பதினேழாவது, பதினெட்டாவது மற்றும் பத் தொன்பதாவது அறிக்கைகளை, குழுத் தலைவரின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

4. அரசினர் சட்ட முன் வடிவு (அறிமுகம் செய்தல்) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவு, 1993.